

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 01-09-2025

# தன்னைப் போலவே நினைக்கும் பழனிசாமி

**தன்னைப் போலவே மற்றவர்களையும், ‘அப்படித்தான் இருப்பார்கள்’ என்று நினைக்கிறார் பழனிசாமி. மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களது ஜெர்மன், இங்கிலாந்து பயணத்தை தாங்கிக் கொள்ள முடியாமலும், தமிழ்நாட்டுக்கு வந்து கொண்டிருக்கும் முதலீடுகளைப் பார்த்து எரிச்சல் அடைந்தும் அறிக்கை விட்டுள்ளார் பழனிசாமி.**

தி.மு.க. அரசு பொறுப்பேற்றது முதல் இதுவரை 10 இலட்சத்து 62 ஆயிரத்து 752 கோடி முதலீட்டை தமிழ்நாடு பெற்றுள்ளது. இந்த நான்காண்டு காலத்தில் 922 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoUse) கையெழுத்திடப்பட்டுள்ளது. இவை நேரடியாக 20 லட்சத்து 45 ஆயிரத்து 87 நபர்களுக்கும், மறைமுகமாக 12 லட்சத்து 39 ஆயிரத்து 945 நபர்களுக்கும் வேலைவாய்ப்புகளை உருவாக்கும். அதாவது மொத்தமாக 32 இலட்சத்து 81 ஆயிரத்து 32 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உறுதி அளிக்கப்பட்டுள்ளன. ஒப்பந்தம் கையெழுத்தானதில் பெரும்பாலான திட்டங்கள் நிறைவடையும் நிலையில் உள்ளன.

கையெழுத்தான 922 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் 710திட்டங்கள் நிலம் பெற்றது உட்பட, வணிக உற்பத்தி, சோதனை உற்பத்தி, பகுதி உற்பத்தி, கட்டுமானம் தொடங்குதல் போன்ற பல்வேறு செயல்பாட்டு நிலைகளில் நடைபெற்று வருகின்றன. இது மொத்த புரிந்துணர்வு ஒப்பந்தங்களில், 77 விழுக்காடு ஆகும். முதலீட்டு மதிப்புகளில் 71 விழுக்காடு ஆகும்.

புதிதாக என்ன நிறுவனம் வந்துள்ளது என்று கேட்கிறார் பழனிசாமி. VinFast, Godrej Consumer Products, Rockwell Automation, Yield Engineering System (YES), Tata Power உள்ளிட்ட பல முக்கிய நிறுவனங்கள், ஏற்கனவே உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. இவை அனைத்தும் புதிய நிறுவனங்கள்தான். இதனை அவரே போய் பார்க்கலாம்.

2024 ஆம் ஆண்டில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் (GIM 2024), ரூ.6 லட்சத்து 64 ஆயிரத்து 181 கோடி உறுதியளிக்கப்பட்டது. மொத்தம் 631 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் மொத்தம் 26 லட்சத்து 90 ஆயிரத்து 657 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

**இதுவரை ரூ.1,07,931 கோடி முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டு, 1,65,154 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இது மொத்த புரிந்துணர்வு ஒப்பந்தங்களில், 83 விழுக்காடு ஆகும். முதலீட்டு மதிப்புகளில் 74 விழுக்காடு ஆகும்.**

**தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில், ரூ.3,79,809 கோடி அளவிற்கான முதலீடுகள் உறுதியளிக்கப்பட்டது. 310 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. 8,07,026 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உறுதி அளிக்கப்பட்டுள்ளன. இதுவரையில், ரூ.62,344 கோடி முதலீடு வந்துவிட்டது. 63,310 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றில் 258 திட்டங்கள் நிலம் பெற்றது உட்பட பல்வேறு செயல்பாட்டு நிலைகளில் உள்ளன. இது மொத்த புரிந்துணர்வு ஒப்பந்தங்களில், 83 விழுக்காடு ஆகும். முதலீட்டு மதிப்புகளில் 76 விழுக்காடு ஆகும்.**

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஐந்து முறை வெளிநாடு பயணங்கள் மேற்கொண்டார்கள். இந்த பயணங்கள் மூலம் 36 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலமாக ரூ.18 ஆயிரத்து 498 கோடி முதலீடுகள் தமிழ்நாட்டுக்கு வந்துள்ளன. 30 ஆயிரத்து 37 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளும் உறுதியளிக்கப்பட்டுள்ளது. கையெழுத்தான 36 ஒப்பந்தங்களில் 23 திட்டங்கள் நிலம் பெற்றது உட்பட, பல்வேறு செயல்பாட்டு நிலைகளில் உள்ளன. இது மொத்த புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் 64 விழுக்காடு ஆகும். முதலீட்டு மதிப்புகளில் 46 விழுக்காடு ஆகும்.**

இதுவரை மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளில் தமிழ்நாடு பரவலான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. தெற்கு மண்டலத்தில் 82 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், மத்திய மண்டலத்தில் 45 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், மேற்கு மண்டலத்தில் 129 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் என்று 256 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தத் திட்டங்களில், ரூ.3,69,310 கோடி முதலீடு உறுதி செய்யப்பட்டுள்ளது. 256 திட்டங்களில், 193 திட்டங்கள் நிலம் பெற்றது உட்பட, பல்வேறு செயலாக்க நிலைகளில் உள்ளன. இது மொத்த புரிந்துணர்வு ஒப்பந்தங்களில், 75 விழுக்காடு ஆகும். முதலீட்டு மதிப்பீடுகளில் 76 விழுக்காடு ஆகும். இதில் ஏதாவது சந்தேகம் இருந்தால் பழனிசாமி ஆய்வு நடத்திக் கொள்ளலாம்.

இப்படி தனது ஆட்சி காலம் குறித்து பழனிசாமியால் சொல்ல முடியுமா? 2019 ஆம் ஆண்டு உலக முதலீட்டாளர் மாநாட்டை பழனிசாமியும் நடத்தினார். 304 ஒப்பந்தங்கள் கையெழுத்தானதாகச் சொன்னார். ஆனால் 172 ஒப்பந்தங்கள்தான் நிறைவேற்றப்பட்டன. பாதிக்கு பாதி காலி ஆகிவிட்டது.

தனது அறிக்கையில் தவறான புள்ளிவிபரங்களை தருகிறார் பழனிசாமி. 41 ஒப்பந்தங்கள் போட்டதாகச் சொல்லிய பழனிசாமி, அதில் எத்தனை நடைமுறைக்கு வந்தது என்பதைச் சொல்லவில்லை.

2019 ஆம் ஆண்டு அமெரிக்கா போனார் பழனிசாமி. 27 ஒப்பந்தங்கள் கையெழுத்தானதாகச் சொன்னார். ஆனால் அதில் 12 திட்டங்கள்தான் செயல்பாட்டுக்கு வந்தது. அதாவது 44 விழுக்காடு தான் செயல்பாட்டுக்கு வந்தது. மேலும் மொத்த மதிப்பீட்டில் 20 விழுக்காடுதான் முதலீடாக வந்தது. ஐக்கிய அரபு அமீரகம் போனார் பழனிசாமி. 5 ஒப்பந்தங்கள் கையெழுத்தானதாகச் சொன்னார். ஆனால் இரண்டு திட்டங்கள்தான் உற்பத்தியைத் தொடங்கியது. இவர் கையெழுத்து போட்ட மொத்த மதிப்பீட்டில் 29 விழுக்காடுதான் முதலீடாக வந்தது.

**இப்படித்தான் இப்போதும் நடக்கும் என்று நினைக்கிறார் பழனிசாமி. ‘தான் திருடி பிறரை நம்பாள்’ என்ற பழமொழிக்கு இலக்கணமாக இருக்கிறார் பழனிசாமி.**



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், ரூபாய் 65 கோடி மதிப்பீட்டில் திரு.வி.க. நகர் மண்டலம், ஓட்டேரி நல்லா கால்வாயில் தூர்வாருதல், தடுப்புச் சுவரினை உயர்த்திக் கட்டுதல், சங்கிலி வேலி அமைத்தல் உள்ளிட்ட பணிகளை நேற்று முன்தினம் (30.08.2025) தொடங்கி வைத்துப் பார்வையிட்டார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர். பிரியா, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., தாயகம் கவி எம்.எல்.ஏ., துணை மேயர் மு.மகேஷ் குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், உயர் அதிகாரிகள் டாக்டர் டி.ஜி.வினய், கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### வட கிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக – சென்னையின்

# மழைநீர் வடிகால் கட்டமைப்பை மேம்படுத்தும் வகையில் தூர்வாரும் பணிகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் துவக்கி வைத்து பார்வையிட்டார்!

சென்னை, செப் 1 -

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சென்னையின் மழைநீர் வடிகால் கட்டமைப்பை மேம்படுத்தும் வகையில் ஓட்டேரி நல்லா கால்வாய், இரயில்வே ஆன்ஸ்லி கால்வாய் கேப்டன் காட்டன் கால்வாய், கொடுங்கையூர் கால்வாய் உள்ளிட்ட தூர்வாரும் பணிகளைத் தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வடகிழக்குப் பருவமழையின் போது அதிகமழை பொழிவு ஏற்பட்டாலும், சென்னையில் நீர் தேங்காமல் இருப்பதற்காக தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் நீர்வளத்துறை ஆகியவற்றின் கட்டுப்பாட்டில் உள்ள கால்வாய்களில் ஆழப்படுத்துதல், அகலப்படுத்துதல், கான்கிரீட் சுவருடன் கூடிய மூடு கால்வாய்களை அமைத்தல், மழைநீர் கால்வாய்கள் அமைத்தல், கால்வாய்கள் கடலுடன் சேரும் பகுதிகளில் தூர்வாருதல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள உயர் அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டங்கள் மற்றும் களஆய்வு பணிகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றார்.

இதன் காரணமாக கடந்த ஆண்டுகளில் எதிர்பாராத வகையில் சென்னையில் அதிக அளவு மழைபெய்த போதும், சில மணி நேரங்களிலேயே வெள்ளநீர் வடிந்து உடனடியாக போக்குவரத்து இயல்பு நிலைக்கு திரும்பிய தால் பல்வேறு தரப்பினரிடமிருந்து பாராட்டைப் பெற்றது. தற்பொழுது பிற மாநிலங்களில் மேக வெடிப்பு உள்ளிட்ட பெருமழைப் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது. இது போன்ற சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக குறிப்பாக சென்னையின் பல்வேறு பகுதிகளில் மழை வெள்ள முன்னேற்பாட்டுப் பணிகள் முன்னுரிமை அடிப்படையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட திரு.வி.க. நகர் மண்டலம், ஓட்டேரி நல்லா கால்வாயில் 65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தூர்வாருதல், தடுப்புச்சுவரினை உயர்த்திக் கட்டுதல், சங்கிலி வேலி அமைத்தல் உள்ளிட்ட பணிகளை நேற்று (30.8.2025) தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்.

தொடர்ந்து, திரு.வி.க. நகர் மண்டலம், இரயில்வே ஆன்ஸ்லி கால்வாயில் 3.27 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், தண்டையார்பேட்டை மண்டலத்தில் வியாசர்பாடி, கேப்டன் காட்டன் கால்வாயில் 6.85 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், கொடுங்கையூர் கால்வாயில் 3.75 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் என மொத்தம் 78.87 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தூர்வா ருதல், பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் மிதக்கும் பொருட்களை அகற்றும் பணிகளைத் தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்.

மேலும், நீர்வளத்துறை யின் மூலம் 28 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எண்ணூர் சிற்றோடை பாலம், கொசஸ்தலை ஆற்றில் சாம்பலை அகற்றுதல் மற்றும் தூர்வாரும் பணி, எண்ணூர் சுரங்கப்பாதை பக்கிங்காம் கால்வாயில் 4.50 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் தூர்வாரும் பணி, அமுல்லவாயல் பாலம், புழல் உபரி நீர் கால்வாயில் 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தூர்வாரும் பணி என மொத்தம் 32.90 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான தூர்வாரும் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுகளின் போது, சீரமைப்புப் பணிகளை வடகிழக்குப் பருவமழைக்கு முன்னதாக முடிவடையும் வகையில் விரைவாகவும், தரமாகவும் மேற்கொள்ள வேண்டும் எனவும், பணிகளை தொடர்புடைய உயர் அலுவலர்கள் தொடர் ஆய்வு மேற்கொண்டு குறிப்பிட்ட காலத்தில் முடிவடைவதை உறுதி செய்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே. என்.நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஆர்.டி.சேகர் ஜே.ஜே.எபினேசர், எஸ்.சுதர்சனம், கே.பி.சங்கர், துணை மேயர் மு.மகேஷ்குமார், சிறப்பு திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், நீர்வளத் துறை செயலாளர் ஜெ. ஜெயகாந்தன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், வட்டார துணை ஆணையாளர்கள் எச்.ஆர். கௌஷிக், கட்டா ரவி தேஜா, நீர்வளத்துறை தலைமைப் பொறியாளர் பொதுப்பணித்திலகம் மற்றும் மண்டலக்குழுத் தலைவர்கள் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## செஞ்சியில் 6 இணைகளுக்கு திருமணம்!

### செஞ்சி மஸ்தான் வாழ்த்து

செஞ்சி, செப். 1 -

செஞ்சியை அடுத்தவரி கல்கிராமத்தைச் சேர்ந்தசிவசங்கர் காரை கிராமத்தைச் சேர்ந்த சங்கீதா, கப்பை கிராமத்தைச் சேர்ந்த ராமதாஸ், நெ.புதூர் ரேவதி,மேலச்சேரி ஜெயக்குமார் அவ்வையார் குப்பம் தாமரைச்செல்வி, சியாப்பூண்டிகாமராஜ் தமிழேந்தி, நெகனூர் லட்சுமணன் .மேல் ஒலக்கூர் தெய்வானை, கோனை ராஜமாணிக்கம் கருவாச்சி ராதிகா உள்ளிட்ட 6 இணைகளுக்கு திருமணம் சிங்கவரம் ரங்கநாதர் திருக்கோவிலில்வேத மந்திரங்கள் முழங்க உறவினர்கள் முன்னிலையில்நடத்தி வைக்கப்பட்டு அவர்களுக்கு 4 கிராம் தங்கத்தாலி மற்றும் ரூ 70ஆயிரம் மதிப்புள்ள கட்டில் மெத்தை பீரோ உள்ளிட்ட சீர்வரிசை பொருட்களைமணமக்களுக்கு முன்னாள் அமைச்சர், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான்,வழங்கி மணமக்களை வாழ்த்தினார்.

நிகழ்ச்சியில்செஞ்சி ஒன்றிய குழு தலைவர் விஜயகுமார்,செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், மேல்மலையனூர் அங்காளம்மன் கோயில் உதவி ஆணையர் சக்திவேல்ஆய்வாளர் சங்கீதா,முன்னாள் மாவட்ட கவுன்சிலர் குணசேகரன், முன்னால் ஊராட்சி மன்ற தலைவர் ரங்கநாதன் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் சதீஷ்குமார், கோவில் மேலாளர்மணி, மாவட்ட பிரதிநிதி அய்யாதுரை, தொண்டரணி பாஷாமற்றும் மணமக்களின் பெற்றோர்கள் உறவினர்கள் கலந்து கொண்டனர்.

### டெல்டா மாவட்டங்களைச் சேர்ந்த

# மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்!

## மண்டலப் பொறுப்பாளர் – அமைச்சர் கே.என்.நேரு அறிவிப்பு!



டெல்டா மாவட்டங்களைச் சேர்ந்த ஒன்றுபட்ட திருச்சி மாவட்டம், ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டம் மற்றும் திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, கடலூர் மேற்கு மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்டக் கழகச் கழகச் செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதிப் பொறுப்பாளர்கள் கூட்டம் 03.09.2025 காலை 10.00 மணியளவில் திருச்சியிலுள்ள கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறுகிறது.

எனவே சம்பந்தப்பட்ட அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:** கழக ஆக்கப் பணிகள்

**அமைச்சர் கே.என்.நேரு**

மண்டலப் பொறுப்பாளர்

கழக முதன்மைச் செயலாளர், தி.மு.க.

### சிவகங்கை மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர்

# மேலவெள்ளூர் ஏ.ஆர்.கே.தேவதாஸ் இல்லத் திருமணம்!

## அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தலைமையில் நடைபெறுகிறது!

சிவகங்கை. செப். 1 -

சிவகங்கை மாவட்ட சுற்றுச் சூழல் அணி துணை அமைப்பாளர் ஏ.ஆர்.கே. தேவதாஸ் - தே. விசாலாட்சி ஆகியோரின் புதல்வர் ஆர்.கே.டி. செண்பகராஜ்-க்கும் திருப்புவனம் ஒன்றிய கவுன்சிலர் அ.ஈஸ்வரன் - ஈ.ஈஸ்வரி ஆகியோரின் புதல்வி ஏ.இ. தர்ஷணாவுக்கும் திருமணம் 07.09.2025 - ஞாயிற்றுக் கிழமை காலை 10.45 மணியளவில் சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வேலம்மாள் மெட்ரிக் பள்ளி அருகில் உள்ள வேலம்மாள் அரங்கத்தில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவில் மாவட்ட துணைச் செயலாளர் த. சேங்கை மாறன் வரவேற்புரையாற்றுகிறார்.



இம்மணவிழாவினை மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், ஆ. தமிழரசி ரவிக்குமார், கார்த்திக் ப.சிதம்பரம் எம்.பி., முரசொலி செய்தியாளர் கு.சேது, எஸ். மாரியப்பன் கென்னடி, எஸ். கார்த்திகேய சிவசேனாபதி, வசந்தி சேங்கைமாறன், ஏ.பி.ஆர். ரகுபதி, எஸ்.மோகன்குமார், பொன்.மு.சேது ராமலிங்கம், ஜி.காந்தையா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இம்மணவிழாவில் அ. கணேசன், ஜோன்ஸ் ரூசோ, மேயர் சே. முத்துதுரை, நா. குணசேகரன், பா. சின்னையா, நாகனி பா. செந்தில்குமார், கே. இராமகிருஷ்ணன், சி. பூரண சங் கீதா, வி. குமரேசன், வி. பிரபாவதி, எல். பாலசுப்பிரமணியம், கே.கே. பாலதண்டாயுதம், எஸ். சிவதேவ்குமார், என். தம்பிபாலன், ஆர். ராமநாதன், என். சிவக்குமார், என். பனையப்பன், கே. சுப்பிரமணியன், தா. இராமையா, குரு. சிங்காரவேலன், ஏ.ஆர.ஜெயமூர்த்தி, தெய்வாணை இளமாறன், தமிழ் பிரியா வேங்கை பிரபாகரன், பொன். மணிமாறன், எஸ். பி. சரவணன், சரவணா புவனேஸ்வரி, கே. ஜெயவேல், கார்மேகம் செல்வி, அ. மணிமுத்து, கே. சூர்ய கலாநிதி, பா. பாலரவிராஜன், எம். பாண்டித்துரை, பி. கார்த்தி உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்று வாழ்த்துகின்றனர்.

எஸ்.மகேந்திரன், பொன். இளங்கோவன், எஸ். சுப்பையா ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.